**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 376/2019 PW . 8**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கலையரசன் | தந்தை/கணவர் பெயர்: கிருஷ்ணசாமி | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.05.2026

---

**(2 வது எதிரி ஆஜர். 1 ம் எதிரி ஆஜரில்லை. 1 வது எதிரி சார்பில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )**

**<u>06.05.2026 முதல் விசாரணை:</u>**1.

1. நான் செல்லியம் பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டடப்படும் ஆவணத்தில் எனது கையொப்பம் இல்லை. இவ்வழக்கு விவரம் பற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அனுமதிக்கப்படுகிறது.</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

2. 2017 ல் நான் சிங்கம்புணரியில் உள்ள மணப்புரம் பைனான்ஸ் கிளையில் செக்யூரிட்டியாக வேலை செய்தேன். அந்த சமயத்தில் 1 ம் எதிரி அங்கு உதவி மேலாளராக வேலை பார்த்தார் என்றால் சரிதான். அவரை எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். சாட்சி இளங்கோவை எனக்கு தெரியும். அவரும், மேற்படி பைனான்ஸில் செக்யூரிட்டியாக நான் வேலை செய்த காலத்தில் வேலை செய்தார். கடந்த 05.10.2017 ம்தேதி காலை 9.00 மணிக்கு சிங்கம்புணரி கண்ணையா காம்பிளக்ஸ்ல் உள்ள மணப்புரம் பைனான்ஸில் நானும், இளங்கோ என்பவரும் இருந்த போது அங்கு வந்த போலீசார் தங்க நகைகளை எடுத்துவிட்டு போலிநகைகள் வைத்து மோசடிசெய்த வழக்கு சம்மந்தமாக எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதற்கு சாட்சியாக நாங்கள் கையொப்பம் செய்தோம் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது 1 ம் எதிரி எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக

உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி நிறுவனத்தில் வேலை செய்த போது காலை 09.00 மணிக்கு பணிக்கு சென்று விடுவேன் என்றால் சரிதான்.

**<u>3.எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u> இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அரசு மற்றும் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்குரைஞர்களுக்கு முன்பாக சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி.